Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 11 (24.4.94) ஞாயிற்றுக்கிழமை ஓசை 65

யாழ்ப்பாணம்

## தொழிலாளர் தினத்தைமுன்னிட்டு உற்பத்தி எழுச்சிவார போட்டிகள்

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும் உற்பத்தி எழுச்சிவார போட்டிகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை நான்கு தினங்கள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் இன்று மட பெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி பிற்பகல் 2. 30 மணிக்கு நீர்வேலி மாட்டுவண்டிச் சவாரித்திடலில் நடைபெறும். கடல் வளம்சார் போட்டிகளில் நீச்சல், தோணிதாங்கல், பாய் மரம் ஓட்டுதல், வலைபின்னுதல், கயிறு இணைத்தல் போட்டிகள் நாளை திங்கட்கிழமை காலை 8. 30 மணிக்கு நாவாந்துறை காக்கைதீவு கடற்கரையிலும் துடுப்பு (6 ஆம் பக்கம் பார்க்க)

# காமினிக்கு உறுப்பினர் பதவி! இன்றேல் பாராளுமன்றம் கலைப்பு?

## ஜனாதிபதி டி. பி. தீவிர ஆலோசனை

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவை பாராளுமன்ற உறுப்பினராக்கும் முயற்சியில் ஜனாதிபதி டி பி. விஜேதுங்கா தீவிர அக்கறை காட்டிவருகின்றார். ஆனால் இதனைக் கட்சியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் எதிர்த்து வருகின்றனர். இதேசமயம், காமினிக்கு உறுப்பினர் பதவி வழங்கும் தனது முயற்சி பயனளிக்காது போனால், பாராளுமன்றத்தைக் கலைத்துவிட ஜனாதிபதி ஆலோசித்து வருவதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தீவிரமாகப் பேசப்படுகின்றது.

ஐ தே. கட்சியில் மீண்டும் காமினி திஸநாயக்கா இணைந்தபோது ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும், அமைச்சர் பதவியும் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது

ஆனால், தென்மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கியதேசியக்கட்சி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து காமினி திஸநாயக்காவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்கு ஐ. தே கவிற்குள் பலமான எதிர்ப்பு எழும்பியது. இவ் எதிர்ப்பினை கட்சியில் உள்ள பிரேமதாசா ஆதரவாளர்களே கிளப்பியுள்ளனர்.

தனக்கு ஏற்பட்டுள்ள கடும் எதிர்ப்பினால் டி பி. விஜேதுங்கா கடும் கோபம் கொண்டுள்ளார் என்றும் இவ் எதிர்ப்புத் தொடருமானால் தனது முழு அதிகாரத்தையும் அவர் பயன்படுத்தக்கூடும் எனவும் ஓரிரு வாரங்களில் இவ்வாறு பாராளுமன்றத்தை டி. பி விஜேதுங்கா கலைத்துவிடக் கூடும் எனவும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டின் ஜனாதிபதிக்கு தனது கட்சி உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்காமல் உள்ளது ஒரு மோசமான நிலையை ஏற்படுத்தும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இதேசமயம் காமினி திஸநாயக்கவிற்கு பாராளுமன்ற உறுப்பினர்பதவி கிடைப்பதில் மேலும் சில நாட்கள் தாமதமாகும் என ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் கூறியுள் [6 ஆம் பக்கம் பார்க்க]

## சைவசித்தாந்த தேர்வு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் ஆண்டுதோறும் நடாத்தும் சைவ சித்தாந்தத் தேர்வுகள் இவ்வாண்டும் நடைபெறவுள்ளன.

சித்தாந்தப் பாலபண்டிதர், சித்தாந்தப் பிரவேச பண்டிதர் பரீட்சைகள் இம்மாதம் 25ஆம், 30ஆம் திகதிகளிலும் மே மாதம் 2ஆம் திகதியும் நாவலர் மகா வித்தியாலயத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4-00 மணிவரை [6ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிக்குளம் பகுதியில் இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் செட்டிக்குளம் பகுதியில் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். செட்டிக்குளத்திலிருந்து படையினர் இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு முன்நகர்ந்துள்ளதாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இராணுவத்தினரின் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் எந்தத் தாக்குதலையும் நடத்தவில்லை எனவும் அதிகாரிகள் கூறினர்.

## கொலராவிற்கு மேலும் ஒருவர் பலி

(வடமராட்சி)

வடமராட்சியில் கொலரா நோய்க்கு மேலும் ஒரு வயோதிபர் பலியானார். பொலிகண்டி மேற்கு ஊறணி குடியேற்றத்தைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை முருகேசு (வயது 70) என்பவரே பலியானவராவார். (யோ)

## 20 இலங்கைத் தமிழர்கள் தென்னாபிரிக்காவில் கைது

(ஜோகனர்ஸ்பேர்க்)

மேற்கு நாடுகளுக்கு அகதிகளாக செல்லும் இலங்கை அகதிகள் தற்போது தென்னாபிரிக்காவை தமது இடைக்கால தங்குமிடமாக மாற்றியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 20 இலங்கைத் தமிழ் அகதிகள் இவ்வாறு போலி பயண ஆவணங்களுடன் தென்னாபிரிக்காவில் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும் வட அமெரிக்க நாடுகளுக்கும் செல்லும் பாதையாக தென்னாபிரிக்காவை தற்போது உபயோகித்து வருகின்றனர் என்றும் தென்னாபிரிக்காவில் கைதான இலங்கையரிடம் சிங்கப்பூரில் உள்ள ஒரு போலி

## ஆதரவாளர் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டம் தாண்டியடி காஞ்சிரங்குடா எனும் இடத்தில் வைத்து கடந்த 19 ஆம் திகதி காலை 9.45 மணியளவில் சிறிலங்கா விசே அதிரடிப்படையினர்

## வெடி விபத்தில் இரு போராளிகள் வீரச்சாவு

யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் விடுத

2 ஆம் லெப். வேலவன்/ இளங்கோ (இராசதுரை லோகராஜா நாவற்காடு

## டி. பி. மீது செல்வாக்கு செலுத்த பிரேமா ஆதரவாளர் தீவிர முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துவதன் மூலம் அவர் மீது செல

என்றும் தென்மாகாண தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து அவரைத் தமது முழுச்செல்வாக்கிற்கு உட்படுத்த பிரேமதாசா ஆதரவாளர்

ரேயானால் அவர்கள் எதிர்க் கட்சியினருடன்சேர்ந்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு எதிரான நடவடிக்கை

யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். இசையமுதன்|மனோஜ் (திரவியநாதன் ஜெகநாதன் மாவிட்டபுர வீதி, கீரிமலை) 2 ஆம் லெப். வேலவன்| இளங்கோ (இராசதுரை லோகராஜா நாவற்காடு கரவெட்டி, மட்டக்களப்பு) என்னும் இரு போராளிகளுக்கும் தமிழீழவிடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



2ஆம் லெப்டினன்ட்
இசையமுதன்
(மனோஜ்)



2ஆம் லெப்டினன்ட்
வேலவன்
(இளங்கோ)

என்றும் தென்னாபிரிக்காவில் கைதான இலங்கையரிடம் சிங்கப்பூரில் உள்ள ஒரு போலி பயண முகவரின் ஆவணங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள்முதலில் சிங்கப்பூர் சென்று அங்கிருந்து டர்பன் வந்துசேர்ந்ததாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. 20 இலங்கைத் தமிழர்களும் பயணம் செய்த சிங்கப்பூர் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஜோகனர்ஸ்பேர்க்கில் இறங்கிய வேளையிலேயே இவர்கள் தென்னாபிரிக்க அதிகாரிகளினால் கைதாகினர்.

கைதான இவர்கள் கொழும்புக்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். அகதிகளை அழைத்துச் செல்லும் சட்ட விரோத பயண முகவர்கள் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள உகண்டா, கென்யா போன்ற நாடுகளையும் தமது பிரயாணப் பாதையாக உபயோகிப்பதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# ஜனாதிபதி விஜேதுங்கா தலைமையில் பேரினவாதம் மேலோங்கியுள்ளது

## இந்து பத்திரிகையில் தெரிவிப்பு

(சென்னை)

ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைமைத்துவத்தின் கீழ் பேரினவாதம் மேலோங்கியுள்ளதைக் காண முடிகின்றது. இவ்வாறு சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகையில் மாலினி பார்த்தசாரதி குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்காவில் இனப்பிரச்சினையை ஒதுக்கிவைத்துவிட்டு ஜனாதிபதி தெரிவு செய்யப்படும் முறை பற்றியோ, அரசியல் சீர்திருத்தம் பற்றியோ பேசுவதில் எந்தவித அர்த்தமுமில்லை என்ற வகையில் கருத்து வெளியிட்டுள்ள அவர் மேலும் குறிப்பிடுகையில் பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது கடைப்பிடிக்கப்பட்ட சிறுபான்மையின சமூகங்களை அரவணைப்பதான தோற்றப்பாடு தற்போது சீர்குலைந்துள்ளது இனப்பிரச்சினை தொடர்பான ஜனாதிபதியின் கருத்துக்கள் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக வழியில் தீர்வு காணப்பட முடியும் என்ற நம்பிக்கையை சீர்குலைப்பதாக இருக்கின்றது. அத்துடன் மிதவாத தமிழ்த் தலைமைகளின் செயலற்ற தன்மையானது விஜேதுங்கா நிர்வாகத்தின் பிற்போக்குத் தனங்களை நியாயப்படுத்துவதற்கு மட்டுமே உதவுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் தொடர்கின்ற இனப்பிரச்சி

[6ஆம் பக்கம் பார்க்க]

கடந்த 19 ஆம் திகதி காலை 9.45 மணியளவில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப்புலிகள் ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த கணபதிப்பிள்ளை சந்திரசேகரம்[வயது 47, 5 பிள்ளைகளின் தந்தை செல்வநகர் ஆரையம்பதி 3] எனும் ஆதரவாளருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைதெரிவித்துக் கொள்கின்றனர்.

## கடற்படை தாக்குதல்

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதிகள் மீது நேற்று காலை சிறிலங்கா கடற்படையினர் அகோர தாக்குதலை மேற்கொண்டனர். காலை 6.00மணிமுதல் அப்பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்கள் மீதும் குடியிருப்புகள் மீதும் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடற்படையினரின் கடும் தாக்குதலின் மத்தியில் கடலில் தொழில் செய்து கொண்டிருந்த மீனவர்கள் தமது தொழில் உபகரணங்களை

[6ஆம் பக்கம் பார்க்க]

## மிதிவெடியில் காயம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பீச்றோட் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள் மிதிவெடி ஒன்று வெடித்து இளம் பெண் ஒருவர் சிறு காயமடைந்தார்,

சிறிலங்கா இராணுவத்தினர் முன்னர் அங்கு நிலை கொண்டிருந்த போது சேதமாக்கப்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள் இப்பெண் துப்புரவு செய்து கொண்டிருந்த போது கல்ஒன்றைத் தூக்கி வீசிய போது கல்

[6ஆம் பக்கம் பார்க்க]

பி. விஜேதுங்காவிற்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்துவதன் மூலம் அவர் மீது செல்வாக்கு செலுத்துவதே பிரேமதாசா ஆதரவாளர்களின் நோக்கம் எனக்கூறப்படுகிறது.

இதுவரை காலமும் பிரேமதாசா ஆதரவாளர்களை டி. பி. விஜேதுங்கா பொருட்படுத்தாது இருந்து வந்தார் தொடர்ந்து அவரைத் தமது முழுச்செல்வாக்கிற்கு உட்படுத்த பிரேமதாசா ஆதரவாளர்கள் மேற்கொள்ளும் முயற்சியே ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இன்றுஎழுந்துள்ள நெருக்கடி எனதெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கடும் போக்கைக் கடைப்பிடிப்பாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடக்கூடும் எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இவ்வாறான ஒரு சூழ்நிலை மிக விரைவில் ஏற்பட்டால் கூட ஆச்சரியப்பட ஏதுமில்லை என அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

# தொலை நோக்கு திறமை விஜேதுங்காவிற்கு இல்லை

## பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கூறுகிறார்

[கொழும்பு[

ஜனாதிபதி பிரேம தாசா-விஜேதுங்கா ஆகிய இருவரினதும் ஆட்சியை ஒப்பிட்டுப் பார்த்தால் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தொலைநோக்கு ஆற்றல் இருந்தது திறமை இருந்தது ஆனால் இப்போது டி. பி. விஜேதுங்கா போகும் திசை தெரியாத நிலைகாணப்படுகிறது நாட்டின் முழுகட்டமைப்பு உடைவது போலுள்ளது என கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பதவியை அண்மையில் துறந்த பேராசிரியர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நெருங்கி செயற்பட்டவரான பேராசிரியர் பீரிஸ் தற்போது சுதந்திரக்கட்சியில் இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்து அவர் பி. பி. ஸியின் புதிய கொழும்பு செய்தியாளரான ஜோர்ஜ் ஆர்னிக்கு விபரிக்கையில், நாட்டில் ஒரு புதிய அரசமைப்பை கட்டியெழுப்ப சுதந்திரக்கட்சியே உகந்ததாக. உள்ளது இக்கட்சியில் தற்போது புதிய மலர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காண்கிறேன் அதுமட்டுமல்ல 17 ஆண்டுகளின் பின் அதே செயற்பாடு, கொள்கைகள், அதே முகங்களைப் பார்த்தபின் புதியதோர் அரசு ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே உள்ளது. இதற்கு அர்த்தமுள்ள வகையில் பதிலளிக்க சுதந்திரக் கட்சி இன்று இருக்கிறது என நான் கருதுகிறேன் அப்படியான விளைவின் ஓர் அங்கமாக இருப்பதையே விரும்புகிறேன் என்றார்.

# சோதனையிலீடுபட்டிருந்த பொலிசார்மீது தாக்குதல்

## ஒரு பொலிசார் பலி; ஆயுதம் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்திலிருந்து 150 யார் தொலைவிலுள்ள சோதனை நிலையத்தில் சோதனையிலீடுபட்டிருந்த சிறிலங்கா பொலிசார் மீது விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்தினர்.

கடந்த 19ஆம் திகதிமாலை 7.25 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் ஒரு பொலிசார்கொல்லப்பட்டார். ஏனையோர் தப்பி ஓடி விட்டனர் அங்கிருந்த ஆயுதங்கள்விடுதலைப்புலிகளால்கைப் பற்றப்பட்டன.

- ரி-56 -1 ரகதுப்பாக்கி -01
- மகசின் -01
- நடுத்தர ரவைகள் -30

என்பவையே கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் ஆகும்.

# முஸ்லிம் வாலிபரிடம் மிதிவெடிகள் மீட்பு

(மட்டக்களப்பு)

ஏறாவூரில் வீடியோ நிலையம் ஒன்று எரிக்கப்பட்டது தொடர்பாக கைதான ஒருவரிடமிருந்து ஏழு மிதிவெடிகள், ஏழு குண்டு வெடிக்க வைக்கும் கருவிகள், இராணுவ சீருடை ஒன்று என்பன கைப்பற்றப்பட்டன.

[6ஆம் பக்கம் பார்க்க]

26-4-1994
யாழ்ப்பாணம்
26-4-1994
26-4-1994

# வரி விளம்பரம்

## வேட்டுக்குஞ்சு விற்பனை

கைலைன் பிறவுண் 1 1|2 மாதம் வளர்ச்சியடைந்த வேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகாபதி'', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (8105)

## கோல்டன் கொமட் விற்பனை

கோல்டன்கொமட் 10 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி''சந்தைகிழக்கு ஒழுங்கை,மானிப்பாய்(8106)

## ''பார் சோப்''

உங்கள் அபிமான உள்ளூர் மில்க்வைற் பார்சோப் விற்பனையாகிறது: பார் ஒன்று ரூபா 20|- பத்துபார் சோப் மேலுறை தந்து அப்பியாசக் கொப்பி ஒன்று அன்பளிப்பாகப்பெறுங்கள். ''மில்க்வைற்'' (சி-92'1)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் மூன்று பரப்பில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு க. குமாரசாமி 427, கோவில் வீதி, நல்லூர். (8122)

## தண்ணீர்தாங்கி விற்பனைக்கு

8'X8'X4' கனஅடி அளவு கொண்ட இரும்பு தண்ணீர் தாங்கி விற்பனைக்குஉள்ளது தொடர்பு ''மில்க்வைற்'' 525|2, கே கே. எஸ் றோட் யாழ்ப்பாணம். (சி-9237)

## துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம் சந்தா ஏற்றுக் கொள்ளப்படும் (8085)

## காவேரி சீயாக்காய் பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனமாகிய ஆறு வகை இயற்கைப் பொருள்களைக்கொண்டு தயாரிக்கப்படுவது ஒருமுறைபாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர் கந்தசாமி அன்சன்ஸ் 15, ஆடியபாதம்வீதி, யாழ்ப்பாணம் (7899)

## ஆங்கில மருத்துவம்

சகல விதமான நோய்களுக்கும் அனுபவம் வாய்த்த மருத்துவர்களினால் தினசரி காலை, மாலை சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பகவான் ஆங்கில மருத்துவ அகம் 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (சி- 9016)

## இலவச ஆலோசனை

லண்டனில் A.C.M.A, Transport Marketing பட்டங்கள் பெற்றவர் இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தில் மேல் வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறவிரும்புகின்றார் ச. கதிரமலைப்பிள்ளை, 15/3, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர் (7951)

# யாழ். வைத்தியசாலைக்கு லேசர் கருவி வாங்க முயற்சி

## - லூவிஸ்ஹாம் மேயர் நிதி திரட்டல்

(லண்டன்)

அண்மையில் வடபகுதிவந்து திரும்பிய இங்கிலாந்தின் லூவிஸ்ஹாம் மேயர் சின்னமணி யாழ் ஆஸ்பத்திரிக்கென லேசர் இயந்திரம் ஒன்றை வாங்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்

இந்த இயந்திரத்தை வாங்க லண்டனில் மேயர் சின்னமணி நிதிதிரட்டும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார் இந்த லேசர் இயந்திரத்தின் விலை 20 ஆயிரம் பவுண்களாகும் நிதி திரட்டுவதற்காக மேயர் சின்னமணி பிரிட்டனில் உள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் நீரிழிவு நோயாளர்கள் டயப்றிறிற் ரேனோபதி என்ற ஒருவகை நோயினால் பாதிக்கப்படுகின்றனர் இதனை லேசர் இயந்திரம் மூலம் சத்திரசிகிச்சை செய்து குணமாக்கலாம் நிதி திரட்டும் நடவடிக்கையில் ஒரு அம்சமாக மேயர் சின்னமணி கலாசார நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்துள்ளார்.

## அத்துலத்முதலி வாரம் பிரகடனம்

(கொழும்பு)

ஏப்ரல் 23 முதல் 30 வரையான நாட்களை லலித் அத்துலத் முதலி ஞாபகார்த்த வாரமாக அத்துலத் முதலி பவுண்டேசன் என்னும் அமைப்பு அறிவித்துள்ளது.

23-ம் திகதி இரவு நூற்றுக்கணக்கான பிக்குமார்களும், சுமார் ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்களும் கலந்து கொள்ளும் மதச் சடங்குகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உரிய காலத்தில் அறிவுறுத்தல்கள் இல்லை

(நல்லூர்)

ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக உரிய அறிவுறுத்தல்கள் வலயப் பணிமனையின் கீழ் இயங்கி வரும் கல்விக் கோட்டங்களுக்கு வழங்கப்படாததனால் ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் உரிய நேரத்தில் வழங்கப்படுவது தாமதமடைவதாக கோட்டக்கல்வி அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

94 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் நிதிச்சுற்றறிக்கையின்படி 7-ம் 8-ம் திகதிகளில் வழங்கப்படவேண்டும் என ஏற்கனவே யாழ் வலயம் 1ற்குரிய கணக்காளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதே போல இவ்வருடத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டிய திகதிகளும் பொது நிர்வாக, நிதி அமைச்சினால் சகல அரச திணைக்களங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இதன்படி அரச ஊழியர்களின் சம்பளம் உரிய திகதிகளில் திணைக்களங்களினால் வழங்கப்பட்டது. யாழ். கல்வித் திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் எழுதுநர்களும், கல்விச் சேவை உத்தியோகத்தர்களும் ஏன் வலயப் பணிப்பாளர்கள் கூட தமது சம்பளங்களை மார்ச், ஏப்ரல் மாதங்களில் 7-ம் 8-ம் திகதிகளிலேயே பெற்றார்கள்.

ஆனால் இம் மாதங்களுக்குரிய ஆசிரியர்களின் சம்பளங்களை குறிப்பிட்ட 20 ம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு பணிக்கும் அறிவுறுத்தல்கள் யாழ். கல்வித் திணைக்கள கணக்காளரினால் உரிய அறிவுறுத்தல்கள் யாழ் கல்வித்திணைக்கள கணக்காளரிடம் இருந்துகிடைக்கும் வரை கட்டுநிதிக்காக காத்திருந்தார்கள்எனவும் இதனை அவர்கள் தயாரிப்பதற்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவுகள் கூட அவர்களுக்கு வழங்க நடவடிக்கை யாழ். கல்வித் திணைக்களத்தினால் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் வவுனியா, கல்வித்திணைக்களத்தில் நிதி உதவியாளராக கடமை புரியும் உத்தியோகத்தருடன் இவ் ஆசிரிய சம்பளக் கொடுப்பனவுகள் தொடர்பாக உரையாடிய போது மார்ச், ஏப்ரல் சம்பளக் கொடுப்பனவுகள் ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போல மார்ச் 7 ம் 8-ம் திகதிகளில் வழங்கப்பட்டதாகவும் இதற்காக மேலதிகநேரக் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட கல்வித்திணைக்களத்தினால் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

ஆனால் யாழ் கல்விப் பணிமனைகளின் கீழ் இயங்கும் கோட்டக் கல்வி அலுவலகங்கள் இச் சம்பளக் கொடுப்பனவுகளைச் செய்யும் நாட்களுக்கிடையில் வரும் பொது விடுமுறை நாட்களில் கடமை புரிய அனுமதி கேட்டு யாழ் கல்வித் திணைக்கள கணக்காளரினால் மறுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

## சந்திரிகா ஐரோப்பா பயணம்

(கொழும்பு)

மேல் மாகாண முதல்வர்

# நினைவஞ்சலி



## திருமதி இன்னுமணி துரைரத்தினம்

திதி: 24-04 1994

26-4-1989 அன்று இறைபதம் அடைந்த எம் அம்மா!

இந்தஉலக இன்பங்கள் எமை நாடிவரும் வேளையில் உங்கள் நினைவே எம் உள்ளத்தில் பசுமையாக நிலைத்திருக்கும்

தங்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும்,

தாயக பூமியிலும், அந்நிய தேசத்திலும் வாழும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

(சி-9255)

## புங்குடுதீவு நயினாதீவு பல நோ. கூ. சங்கம் - (வ - து)

# சகல அங்கத்தவர்களுக்கும்

திருத்தப்பட்ட உபவிதிக்கமைவாக அங்கத்தவர்களுக்கான பங்குப்பணம் ரூபா 1000|- ஆக மாற்றப்பட்டுள்ளது எனவே சகல அங்கத்தவர்களும் தங்களின் பங்குப்பணத்தைரூபா100-ஆக30-06-94-ம் திகதிக்குள் பூரணப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். தவறின் சகல அங்கத்தவர்கள், கிளைக் குழு உறுப்பினர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், ஆகியோர் தமது அங்கத்துவ உரிமையை இழந்தவராக கருதம்படுவீர்கள்.

# 6-ம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

புதுமடத்தில்: 21-08-1976

பூநகரியில்: 11-11-1993



## 2ம் லெப். வைகுந்தன்

(தம்பித்துரை மோகனதாஸ்)

பூநகரியில் பூகம்பத்தை ஏற்படுத்தி
புதுவரலாறு படைத்த புலிவீரனே
வானமென உயர்ந்த உன்தியாகம்
வையகம் உள்ளவரை வரலாறாகும்

தலைவனின் வழிசென்ற வரிப்புலியே..
தமிழீழம் மீட்கவென உன்னுயிரை
''தாக்குதல் தவளை''யில் தியாகம் செய்து
தனிவரலாறானாய் தமிழீழமதில்.

பூவுலகில் எமக்கு புதிதான தமிழீழம்
பூவாக் கிடைக்க புயலாக புலியாகி
பூநகரி தனிலே புகுந்திட்ட வீரனே
பூமாலை சூடி புகழ்வோமே இந்நாளில்.

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகட்கும் எமது இதய அஞ்சலிகள் இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியையில், மதியபோசனத்தில் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய்.

பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.

(8102)

# நினைவு கூருகின்றோம்.

## 1994-04-24

1985ஆம்ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய-

சண்டி (கிருஷ்ணபிள்ளை செல்வநாயகம் - தம்பிலுவில் - அம்பாறை)

மட்டு - சித்தாண்டிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட நடவடிக்கையின் போது துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

வேல்வேந்தன் (எஸ். சுப்பிரமணியம் - சித்தாண்டி-மட்டு)

1987 ஆம் ஆண்டு மட்டு - தரிப்புல் தோட்டப் பகுதியில் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

பாணம் (7899)

**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கிறோம்.

TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA. (சி-9053)

யாழ். கல்வித் திணைக்கள கணக்காளரினால் உரிய கோட்டங்களுக்குப் பொறுப்பான நிதி உதவியாளர்களுக்கு வழங்கப்படவில்லை என அறியப்படுகிறது. அதே சமயம் சம்பந்தப்பட்ட நிய உதவியாளர்கள் தாமே முயற்சி எடுத்து சம்பந்தப்பட்ட சம்பளக் கொடுப்பனவுகளை தயாரிக்கும் எழுதுநர்களின் ஒத்துழைப்புடன் தயாரித்து

மேல் மாகாண முதல்வர் திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தனிப்பட்ட விஜய மொன்றை மேற்கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். அவருடன் அவரது இரண்டு பிள்ளைகளும் புறப்பட்டுள்ளனர். இந்த வாரத்தில் அவர் நாடு திரும்பலம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இரட்டைச் சூட்டடுப்புப் பாவனையாளர்களின் கவனத்திற்கு

**இவ் அடுப்பில் உச்சப்பயன் பெற: நீண்டபாவனைக்கு**

- ஒரே நேரத்தில் இரு அடுப்புத்தொகுதிகளையும் பயன்படுத்துங்கள்.
- தினமும் அடுப்பை எரிக்குமுன் சாம்பலை அகற்றுங்கள்.
- விறகுகளை சிறிய மெல்லிய துண்டுகளாகப்பிளந்து பாவியுங்கள்
- ஈரமான விறகுகளையும் அளவிற்கதிகமான விறகுகளையும் பயன்படுத்துவதைத் தவிருங்கள்.
- பிரதான அடுப்பில் சுவாலை வெளியேறாதவாறும், துணை அடுப்பில் சுவாலை வெளியேறக்கூடியவாறும் பாத்திரங்களை வைத்துப் பயன்படுத்துங்கள்.
- வாரத்துக்கு ஒருமுறையாவது அடுப்பை மெழுகுங்கள்.

இவ் அடுப்புப் பாவனையின்போது நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளின் தீர்விற்கு உடன் கடித மூலமோ நேரிலோ

தொடர்பு கொள்ளுங்கள்.

**"சக்திப்பகுதி"**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
காங்கேசன்துறைவீதி
காவடிச்சந்தி
தாவடி
தமிழீழம்

சி/ 9254

201/1 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**தலைவர்.**
புங்- நயி பல நோ கூ. சங்கம்

(சி-9243)

# அறிவித்தல்

## தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாணம்

சுந்தரம்பிள்ளை பாலச்சந்திரன்
இல. 44, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழக்கு இல.
மணவிலக்கு 75/94
எதிர்

சுந்தரம்பிள்ளை பாலச்சந்திரன் பெண் விஜயலட்சுமி,
இல. 103, தேவாலய வீதி,
மட்டக்குளிய,
கொழும்பு - 15.

எதிராளி

இத்தால் சகலருமறிக மேற்குறித்த வழக்காளி மேற்குறித்த எதிராளிக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் தமக்கும் குறித்த எதிராளிக்கும் இடையே 30. 05. 1969 திகதியில் நடைபெற்ற திருமணப் பதிவின் மூலம் ஏற்பட்ட உறவை நீக்கி விவாகரத்து வழங்குமாறு கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்

எனவே வழக்காளியின் கோரிக்கையை இம்மன்று பரிசீலிப்பதற்கு எதிராக ஆட்சேபனை ஏதும் இருப்பின் இவ்வறிவித்தல் பத்திரிகையில் விளம்பரப்படுத்திய திகதியிலிருந்து (1)ஒரு மாத காலத்தினுள் தமது ஆட்சேபனையை இம்மன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீதிமன்றக் கட்டளை

**பதிவாளர்**

1994 ஆண்டு சித்திரை மாதம் 22-ம் திகதி
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

(8127)

வெய்திய-

**லதா** (மகேசன் ஞானச்சந்திரன் - 3 ஆம் ஒழுங்கை, வேலூர் குடியிருப்பு கல்லடி - மட்டு)
தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**முகமது** (இராசமாணிக்கம்ரவிநாதன் - பாலாவி குடியேற்றம், பொலிகண்டி - வல்வெட்டித்துறை)
1988ஆம் ஆண்டு மட்டு -கொம்மாந்துறைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சூரி** (முத்துலிங்கம் பத்மநாதன் - கொம்மாந்துறை- செங்கலடி மட்டு)
மட்டு - கிரானில் தேசவிரோதசக்திகளினால் கொலைசெய்யப்பட்டு எமைப் பிரிந்த

**நளினன்** (மணியம் தட்சணாமூர்த்தி கிரான்-மட்டு)
இந்தியப்படையினரால் கைதுசெய்யப்பட்டுகாணாமற்போன யாழ் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியர்
நாட்டுப்பற்றாளரான
(கணபதிப்பிள்ளை நவரத்தினராசா - கிளிநொச்சி)
1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சங்கர்** ( - - கண்டி - மலையகம்)
யாழ் - புத்தூர் வாதரவத்தைப் பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் ரங்கன்** (துரைசிங்கம் ஜெயரங்கன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்)
கிளிநொச்சியில்தேசவிரோதிகளினால்சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளரான கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்
(பரத் - கிளிநொச்சி)
இதே மாவட்டத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட உமையாள்புரத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்,, மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவன்
1992ஆம் ஆண்டு மட்டு -வவுணைத்தீவு இராணுவ முகாம் அருகிலுள்ள ஆற்றில் சடலமாகக் கிடந்த தமிழ்ப்பெண்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

இக்குறியிடப்பட்ட மாவீரர்கள்ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9247)

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# காமினிக்காக பதவி துறக்க அலெக்ஸ் றொபட்சன் மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்க பாராளுமன்ற உறுப்பினராக நியமனம்பெறுவதற்கு வசதியாக தமதுஆசனத்தை விட்டுக்கொடுக்க அலெக்ஸ் றொபட்சன்மறுத்துவிட்டாரெனத் தெரியவருகிறது பறங்கிய இனத்தைச் சேர்ந்தவரானஇவர் தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்கு நியமனம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது

அலெக்ஸ் றொபட்சனும் அவரது குடும்பத்தினரும்அண்மையில் ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு ஜனாதிபதி டி பி விஜே துங்காவினால் வற்புறுத்தப்பட்டபோதும் கூட தேசிய சிறுபான்மை இனமொன்றை பிரதிநிதித்துவப்படுத்தும்தான்அந்த இனத்திற்கு துரோகம்செய்ய முடியாது என்றும் காமினி திசநாயக்காவிற்கு வசதியாக பெரும்பான்மைச் சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவரே விட்டுக்கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்து விட்டாராம்

## ஆயுர்வேத வைத்தியசாலை

(பருத்தித்துறை)

தொண்டமனாறு கெருடாவிலில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது பருத்தித் துறை பிரதேச சபை விசேட ஆணையாளர் திரு. ஆ சிவசுவாமி இவ் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக் கிளையைத் திறந்து வைத்தார். (25)

## விரிவுரை

யாழ்வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நாவலர் தருமகர்த்தா சபையின் ஆதரவில்பௌர்ணமிதோறும் நடைபெறும் சமய விரிவுரைத் தொடரில் நாளை திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு பௌராணிகர் திரு மு தியாகராசா அவர்கள் ''நாவலருக்கு நாம் செய்ய வேண்டியன'' என்னும்பொருளில் விரிவுரை நிகழ்த்துவார்

## கிரிக்கெட் போட்டி

அமரர் ஒறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக ஸ்கந்தா பழைய மாணவர் சங்கமும், சரா சேது விப, ஏபிற் நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் துடுப்பெடுத்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று கொக்குவில் சி. சி.சி பி. ஷப்றா, ஸ்கந்தா ஐ. ப, ஜொனியன்ஸ், பற்றீசியன்ஸ், சென்றலயிட்புளூஸ், கிராஸ் கொப்பர்ஸ், மானிப்பாய் பரீஸ், பல்கலைகழகம், ஓல்ட் கோல்ட் ஆகிய அணிகள் விளையாடவுள்ளன. இப் போட்டிகள் காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஆறு மணிவரை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# சைக்கிள் திருடியவருக்கு நீதிமன்று அபராதம் விதிப்பு

துவிச்சக்கரவண்டி களவாடிய குற்றத்திற்காக பருத்தித்துறை நீதியாளர் பிரதீபா அந்நபருக்கு ஆயிரம் ரூபா குற்றப்பணம் அல்லது 40 நாட்கள் கட்டாய சமூக சேவை புரியுமாறு கட்டளை யிட்டுள்ளார்.

பருத்தித்துறை நாலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பிலிப் அந்தோனிப் பிள்ளை என்பவருக்குச் சொந்தமான 8 ஆயிரம் ரூபாபெறுமதியான துவிச்சக்கர வண்டியை அதே இடத்தைச் சேர்ந்த ஒருவர் களவாடியிருந்தார்.

பருத்தித்துறை காவல்துறையினர் களவாடிய நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நபரை நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்டதையடுத்து நீதியாளர் கடந்த வியாழன் தீர்ப்பு வழங்கினார். (யோ)

## கொப்பேக்கடுவ வரலாற்று நூல்

[கொழும்பு]

லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேக்கடுவவின் வாழ்க்கை வரலாறு ''வீர டென்சில் கொப்பேக்கடுவ'' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

# பொலிஸ் அதிகாரிகள் அதிகரிப்பிற்கு கண்டனம்

பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் அதிகரிப்பதைப்போன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளின் தொகையும் அதிகரித்து வருவதாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிசார் தமது வருடாந்த விழாவை நடத்துவதினால் எந்த பயனும் இல்லை; சகலருக்கும் சமனாக நடக்க தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.
திக்கம் - அல்வாய்

**தேவை**

1. தொழிலாளர்

துண்டுக் கூலி (Piece Work) அடிப்படையில் வேலை செய்வதற்கு தொழிலாளர் தேவை

**விண்ணப்ப முடிவுத் திகதி: 30-4-94**

2. வெற்றுப் போத்தல்


750 மி.லீ. போத்தல் (சாராயப் போத்தல்) தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். விலை பேசித் தீர்க்கப்படும். குறைந்த அளவு போத்தல் உள்ளவர்கள் நேரடியாக எம்மிடம் அல்லது வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ளலாம். நெல்லியடியில் உள்ள ''பனையகம்'' விற்பனை நிலையத்திலும் ஒப்படைத்து பணம் பெற்றுக் கொள்ளலாம்

பொதுமுகாமையாளர்,
வடமராட்சி ப. தெ. வ. அ. கூ.
சங்கங்களின் கொத்தணி.
திக்கம்,
அல்வாய்.
(5861)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
02 04-1963

தாயக மண்ணில்
24 04-1989



**கப்டன் ரங்கன்**
**(துரைசிங்கம் ஜெயரங்கன்)**


ஆருயிர் செல்வமே ரங்கா
மன்றாடி வேண்டி நின்றோம்
கவர்ந்து விட்டான் காலதேவன்
என்றாலும் ஈழநாட்டுக்காய்
இன்னுயிர் ஈர்த்தாயே உன்
நினைவலைகளை எமதுள்ளம் மறக்குமா?

புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
ஏழாலை கிழக்கு.

அம்மா, சகோதர சகோதரிகள், உறவினர், நண்பர்கள்.

(8123)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்தலும்



**திருமதி பரமேஸ்வரி - சின்னத்துரை**

மலர்வு: **1932-07-15** உதிர்வு: **1994 03 25**

எங்கள் உள்ளமெல்லாம் உறையும் பாசத்தோடு, பண்போடு வளர்த்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

எமது இல்லத்தில் 1994-04-24-ம் திகதி ஞாயிறு (இன்று) நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய உணவு போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களை கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

1994-03-25-ம் திகதியில் நடைபெற்ற இறுதிக் கிரிகைகளில் பங்கு பற்றியோர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோர்களுக்கும், மற்றும் பலவழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்

நன்றி.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

தகவல்: திரு மு சச்சிதானந்தம் (மணி)
வன்னிய சிங்கம் வீதி,
இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(8121)

வாரீர் வந்து பாரீர்
வல்வையில் இந்திர விழா

## 25 - 04 - 1994 (திங்கள்)

வல்வை முத்துமாரி அம்பாள் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு

வல்வை நெடியகாட்டு பிள்ளையார் கோவில் மோர்மட வரவேற்பு விழா

காலை 8 மணியளவில் அம்பாள் நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலை வந்தடைந்ததும் இராட்சத புகைக் குண்டுகள் ஆகாயத்தை நோக்கிப் பறக்கவிடப்படும் அற்புதக்காட்சி இடம்பெறும்

**இரவு நிகழ்ச்சிகள் 7 மணிக்கு**

கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினருடன் சிதம்பரநாதன் குழுவினர் இணைந்து வழங்கும் நாதஸ்வரக் கச்சேரியுடன் ஆரம்பமாகும்.

வயலின் இசை: திருமதி கமலா கந்தசாமி அவர்களின் மாணவிகள்

**அதனைத் தொடர்ந்து**

**யாழ்ப்பாணத்தின் பிரபல இரண்டு இசைக்குழுக்கள் வடமராட்சியில் முதன்முறையாக இணைந்து வழங்கும்**

## "அருணா" - "ஆனந்தன்" குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும்

**நிகழ்ச்சியின் இடையே இராட்சத புகைக்குண்டுகளும் சிறிய புகைக்குண்டுகளும் ஆகாயத்தில் பறக்கவிடப்படும்**

யாவும் ஒன்றுசேர்ந்து வல்வை நகரை இந்திரலோகமாக மாற்றவிருக்கும் அற்புதக்காட்சியைக் காண வாரீர்!! - வல்வை மக்கள்

காணத் தவறாதீர்!! தவறியபின் வருந்தாதீர்!

மீண்டும் சேவையில்

"கணபதி மின் அமைப்பாளர்கள்"

நெடியகாடு, வல்வெட்டித்துறை

(8119)

# அதிசிறந்த பல்கலை. மாணவருக்கு துரைராசா தங்கப்பதக்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக் கழகத்தின் அதிசிறந்த மாணவருக்கு பேராசிரியர் அ. துரைராசா தங்கப்] பதக்கம் வழங்கப்படவுள்ளது. இவ் வாண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் இத் தங்கப்பதக்கம் வழங்கப்படவிருக்கிறது.

யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறும் மாணவர்களில் அனைத்து துறைகளிலும் அதி சிறந்து விளங்கியவருக்கு மேற்படி தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பேராசிரியர் அ. துரைராசா நிதியத்தில் இருந்து பெறப்படும் நிதியைப் பயன்படுத்தி மேற்படி தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது. (க)


உ

## சைவ சித்தாந்தப் பேருரை மகாநாடு

ஆரம்பம்; நாளை 25-4-94 திங்கட்கிழமை காலை 9 00 மணி

இடம்; யாழ் இந்துக்கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்

பேருரையாளர்கள்;
கலாநிதி நா. சுப்பிரமணியன்
திரு. க. சிவானந்தமூர்த்தி
(முதுநிலை விரிவுரையாளர்கள், யாழ் பல்கலைக்கழகம்)

அன்பளிப்பு வெளியீடு;
சிவஞானப்பிரகாசம்
இதில் பேராசிரியர் க. கைலாசபதி எழுதிய சைவ சித்தாந்த மதிப்புரை இடம்பெற்றுள்ளது.

வெளியீட்டுரை;
செல்வி கு. உதயமலர்
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் மெய்கண்டதேவர் ஆதீனம் அழைக்கின்றது

(8118)


## நினைவஞ்சலிக் கூட்டம்

(நல்லூர்)
அண்மையில் காலஞ்சென்ற எழுத்தாளர் டானியல் அன்ரனியின் நினைவையொட்டி ஓர் அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டம் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு 'நந்தி' தலைமையில் நடைபெறும்.

# சுவிஸிலுள்ள இல. அகதிகள் படிப்படியாக திரும்புவர்

இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் திட்டத்தைப் படிப்படியாகச் செயற்படுத்த சுவிஸ் அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வருடத்தில் முதற் தொகுதி அகதிகள் திருப்பி அனுப்பப் படவுள்ளனர். முதற் கட்டத்தில் 600 அகதிகள் மாத்திரம் இந்த வருடம் திருப்பி அனுப்பப்படுவார்த்துகள்.

அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் சர்வதேச மரபுகளும் சட்டங்களும் பின்பற்றப்படும் என சுவிஸ் அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இது குறித்து அகதிகள் நலன்காப்பு அமைப்புகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

சுவிஸ் நாட்டில் சுமார் 20,000 இலங்கைத் தமிழ் அகதிகள் இப்போது இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அரசியல் சம்பந்தப்பட்ட தமிழ் அகதிகளை சுவிஸ் அரசு வெளியேற்றாது என்றும் சுவிஸ் அதிகாரிகள் தரப்பில்கூறப்படுகிறது.

சுவிஸ் நாட்டில் புகலிடம் கோரும் அகதிகளின் எண்ணிக்கை இப்போது அதிகரித்துள்ளது' குருடிஸ் துருக்கியர் மற்றும் முன்னாள் யுக்கோஸ்சுலவேக்கிய அகதிகளும் பெருமளவில் சுவிஸ் நாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அகதிகள் விஷயத்தில் சுவிஸ் அரசு கடும் போக்கை இனிக் கடைப்பிடிக்கும் எனவும் இலங்கைத் தமிழ் அகதிகளை வெளியேற்றுவது சுவிஸில் தங்கியிருக்கும் ஏனைய நாட்டு அகதிகளுக்கு ஓர் எச்சரிக்கை என்றும் சொல்லப்படுகிறது.

## உத்தியோகத்தர் கூட்டம்

(பருத்தித்துறை)
இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்- மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான கூட்டம் எதிர் வரும் 29ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்- பிராந்திய அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்- பிராந்தியமுகாமையாளர் அறிவித்துள்ளார்- (25)

## பெற்றோருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
யாழ்- புனித மரியாள் வித்தியாலயத்தில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுடன் மாதந்தோறும் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வருவதாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவின் தீவகக்கோட்டப் பொறுப்பாளர் செல்விவினோ தெரிவித்துள்ளார். ஒவ்வொரு மாதத்திலும் வரும் 2 ஆவது சனிக்கிழமைகளில் நடாத்தப்படும் இக்கலந்துரையாடல்களில் மாணவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்படுவதோடு இவ்வித்தியாலயத்தில், 'நளாகல்வி வளர்ச்சிக் கழகத்தினால்' நடாத்தப்படும் பிரத்தியேக வகுப்புகளுக்கு மாணவர்களை ஒழுங்காக அனுப்பி வைப்பது தொடர்பாக அறிவுறுத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார், (22)

சூரியகந்த எலும்புக்கூடு தொடர்பாக

# ராணுவத்தினர்வாக்குமூலம் பெறப்படுவது ஆரம்பம்

(கொழும்பு)
சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் தொடர்பாக எம்பிலிப்பிட்டிய முகாமிலுள்ள இராணுவத்தினரின் வாக்கு மூலங்களைப் பதிவு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிசாரும், சட்டமா அதிபர் திணைக்களமும் எம்பிலிப்பிட்டிய மாஜிஸ்திரேட் நீதிமன்ற மேலதிக மாவட்ட நீதிபதிக்கு தெரிவித்துள்ளனர்.

இவ் வழக்கு விசாரணை எம்பிலிப்பிட்டிய நீதி மன்றில் ஆரம்பமானபோது அரச தரப்பு சட்டத்தரணி இரத்தினபுரி மாவட்ட மேல் நீதி மன்றம் சூரியகந்த பகுதியில் மேலும் தேடுதல் நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

இரகசியப்பொலிசார் இங்கு குறிப்பிடுகையில், சூரியகந்த பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் எம்பிலிப்பிட்டிய பகுதியில் காணாமற்போன 31 பாடசாலை மாணவர்களினதும் அல்ல என்று தெரிவித்தனர். அத்துடன் சூரியகந்த பகுதிக்கு அண்மையில் இருந்த இராணுவ முகாமில் அப்போது தங்கியிருந்த இராணுவத்தினரில் பலரும்இப்போது வடக்கு கிழக்கு பகுதி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதால் அவர்களை அணுகி வாக்குமூலம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மாஜிஸ்திரேட் இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் ஜூலை 4ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.


## இதய அஞ்சலி

முன்னாள் தேசிய கூட்டுறவுச் சபை செயலாளரும், முன்னாள் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளரும், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளருமாகிய

அமரர்

### பொ. சிற்றம்பலம் அவர்களுக்கு எமது இதய அஞ்சலி

கூட்டுறவு சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து செயல்பட முன்னின்று உழைத்த செயல்வீரனை இழந்து நிற்கும் சங்க அங்கத்தவர், பணிப்பாளர், பணியாளருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

அங்கத்தவர்
பணிப்பாளர்
பணியாளர்

திக்கம்
அல்வாய்,

வடமராட்சி மனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணியும்

(5882)



## இன்று (24 4-94) யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்

நினைவில் நிலைத்து நிற்கும் இனிக்கும் நிகழ்வு

### செந்தமிழ் பாட்டு 11

விடியலைத் தேடும் பறவைகள்
ஒலிப்பதிவு நாடா
இசையமைப்பாளர்:

யாழோசை கண்ணனின்
இசை நெறியில் நடைபெறும் மாபெரும்

★ இன்னிசை நிகழ்வு ★

இசைத் துறையில் பயிற்சிபெற்று பட்டம்பெற்ற பல பாடகர்கள், பாடகிகள் இணைந்து பல்சுவைப் பாடல்களை வழங்கவுள்ளனர்

பிரபல இசையமைப்பாளர்கள்
இளையராஜா, தேவா, மரகதமணி
ஆகியோரின் தேர்ந்த இசை வண்ணங்களும்

கிற்றார், புல்லாங்குழல், ஒகன் இசையும் நடைபெறவுள்ளன.

இன்று (ஏப்பிரல் 24)
யாழ் கைலாசபதி கலையரங்கம்.

(இ-9240) நேரம் மாலை 3 மணி



உ
சிவமயம்

## இந்து சமய அபிவிருத்திச் சபை சுன்னாகம்

சுன்னாகம்

# அங்குரார்ப்பண விழா

இடம்: சுன்னாகம் கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்

காலம்: 24-04 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2. 00 மணிமுதல்

தலைமை: உயர்திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள் (பிரதேசச் செயலாளர் உடுவில்)

ஆசியுரை: சிவத்திரு. நா. சர்வேஸ்வரக் குருக்கள் அவர்கள்

சிவத்திரு. சி. வெங்கடேஸ்வரசர்மா அவர்கள்

வாழ்த்துரை: தவத்திரு.சண்முகவடிவேல் சுவாமிகள்

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கா துரந்தரி அவர்கள்

செந்தமிழ்ச்செல்வி திருமதி சிற்றம்பலம் மங்கையர்க்கரசி அவர்கள்

சைவ நன்மக்கள், சேவைபுரி ஆர்வலர்கள் பங்கு கொண்டு அங்கத்துவம் பெற்று ஆக்கமும் ஊக்கமும் தந்துதவ அன்புடன் அழைக்கின்றோம்

இறைபணி நாடும்,
நல்லதம்பி செல்லையா
அமைப்பாளர்

கந்தரோடை
சுன்னாகம்
*23-04-1994*

---

வாழ்த்துகின்றோம்

## இ. சுப்பிரமணியம்
## மிதிவண்டி காட்சியகம்,

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாக விற்பனை நிலையம்

இல. 6,8, காங்கேசன்துறைவீதி, சுன்னாகம் *(சி-9248)*

---

மக்கள்

மனதில் பதிந்த 4ஆம் ஆண்டு

உதயமாகிறது

தொழிற் சுத்தம்! அழகின் உச்சம்!!

# அழகுநிலா
# நகைமாடம்

213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

4-ம் அகவையில் கால் பதிக்கும்

## அழகுநிலாவுக்கு

எமது நல்லாசிகள்

# தமிழ்மதி நகைமாடம்

82/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

*(சி-9249)*

யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

*நீ அறிவுடையவனாகில் உன் அறியாமையை நீ அறிவாய்- உன்னை நீ அறியாவிடில் உண்மையில் நீ அறிவிலியே-*

— மார்டின் லூதர் கிங்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2028
தபால் பெட்டி எண் - 05

## பிடியை இறுக்க டி. பி. முனைகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியின் உட்கட்சிப் பூசல் ஓர் எல்லையை எட்டியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது. இந்த நிலையில், கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்கா கட்சிக்குள் தனது அதிகாரத்தையும், தலைமைத்துவத்தையும் நிறுத்துவதற்கு தீவிரமாக முயற்சியில் ஈடுபேட்டுள்ளமையையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மறுவளமாககூறின், ஐ. தே. க விற்குள் டி. பி க்கு அதிகரித்து வருகின்ற எதிர்ப்பை அடக்க அவர் முனைன்றார் என்றும் கூறலாம்.

கட்சித் தலைவர் என்ற ரீதியிலும், நாட்டின் தலைவர் என்ற வகையிலும் நான் மேற்கொள்ளும் செயற்திட்டங்களுக்கு தடையாக இருப்பவர்களுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கப்படும் என டி பி. விஜேதுங்கா எச்சரித்ததில் இருந்தே உட்கட்சிப் பூசலின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும். சிறிலங்காவில் சர்வாதிகாரிகள் போன்று ஆட்சியில் இருந்த முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, மற்றும் ஆர். பிரேமதாசா கூட தமது உறுப்பினர்களை இவ்வாறு வெளிப்படையாக எச்சரிக்கவில்லை.

ஆனால், டி. பி. விஜேதுங்காவின் எச்சரிக்கை எந்தளவிற்கு நடைமுறையில் சாத்தியமானது என்பதையும், அவரின்செயற்திட்டங்களுக்கு ஐ தே. க விற்குள் அவரை எதிர்ப்பவர்களின் ஆதரவு எந்தளவிற்குப் பெறப்படமுடியும் என்பவையெல்லாம் தற்பொழுது அறுதியிட்டு கூற முடியாது. ஆனால், ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறலாம். டி. பி. விஜேதுங்கா எதிர்ப்பாளர்கள் இவரின் மிரட்டல்களுக்கு இலகுவில் பணிந்து போகக் கூடியவர்களோ, அல்லது டி. பி யின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு தலையாட்டக் கூடியவர்களோ அல்ல. இதற்கு அண்மைக்காலச் சம்பவங்களே போதுமான சான்றுகளாகும்.

ஜனாதிபதி இருவாரங்களின் முன்னர் ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் எவரும் ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை வெளிநாடு செல்லக் கூடாது எனத் தடை விதித்திருந்தார். ஆனால், ஜனாதிபதியின் தடை இருந்தபோதும் அதைக் கருத்திற் கொள்ளாது கட்சியின் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே வெளிநாடு சென்றார்.

இதேசமயம், வெளிநாடு சென்ற சிறிசேன கூரேயை உடன் நாட்டுக்குத் திரும்புமாறு ஜனாதிபதி டி. பி. விஜே

## விடுதலைப் புலிகளின் பெயரை சுயநலனுக்கு பயன்படுத்துகின்றனர்

### வை. கோபாலசாமி குற்றச்சாட்டு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் பெயரை தமிழக அரசியல்வாதிகள் சிலர் தமது அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்று வை. கோபாலசாமி கூறியுள்ளார்.

திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசியஅவர் மேலும் கூறுகையில்; விடுதலைப் புலிகளை காரணம் காட்டி அன்றைய தி.மு.க அரசு கலைக்கப்பட்டது. ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. ஜெயலலிதாவின் அரசியல்விருப்பத்தை ராஜீவ்காந்தி நிறைவேற்ற சந்திரசேகரை வற்புறுத்துவதற்கு சுப்பிரமணியம் சுவாமி பயன்படுத்தப்பட்டார். பின்னர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் தமிழ்நாட்டிலிருந்து விடுதலைப் புலிகள் அகற்றப் பட்டுவிட்டதாக வாழப்பாடியும், ஜெயலலிதாவும் மாறி மாறி அறிக்கை வெளியிட்டனர். ஒருவரைஒருவர் பாராட்டிக்கொண்டனர். ஆனால்இப்போது ஜெயலலிதா மீதும்அவரது அரசுமீதும் வாழப்பாடி விடுதலைப் புலிகள் சம்பந்தமாக குற்றம்சாட்டி வருகின்றார். எனினும் தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி எனக்குஎதுவும் தெரியாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் பெருந்துறை - மைலாப்பூர் தொகுதிகளில் நடைபெற இருக்கும் இடைத் தேர்தல்களில்அ. இ. அ. தி. முக வைஎதிர்த்துபொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்பதற்காகக் கூட காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி சேரமுடியாது என்று வை. கோபாலசாமி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்:

தமது கட்சியின் வேட்பாளர் யார் என்பதுபற்றி ஆட்சிமன்றக்குழு முடிவு செய்யும் எனவும், மக்கள் மத்தியில் தமது கட்சிக்கு உள்ள செல்வாக்கை நிருபிக்கும் களமாக இத்தேர்தல் இருக்குமெனவும் தெரிவித்தார்.

## சட்டமன்றஇடைத்தேர்தலில் காங். கட்டுப்பணம் இழக்கும்

(சென்னை)

மைலாப்பூர் மற்றும் பெருந்துறை இடைத் தேர்தல்களின் போது காங்கிரஸ் கட்சியை கட்டுப்பணம் இழக்க வைப்போம் என்று அமைச்சர் கண்ணப்பன் தெரிவித்தார்.

அண்மையில் தாம்பரம் பகுதியில் நடந்த முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்தநாள்வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், புரட்சித்தலைவியின் தயவினால் சட்டமன்றத்திற்கு வந்த இவர்கள் இப்போது பொது வேட்பாளரைத்தேடிக் கொண்டிருக்கின்றனர். பழனியிலும் இராணிப்பேட்டையிலும் இப்படிச்சொல்லி அலுத்துப்போய்த்தான் பழனியைப் பறிகொடுத்தனர். இப்போது மைலாப்பூர், பெருந்துறைக்கு வந்திருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

## வாழப்பாடியை பதவிநீக்க காங். எம் எல். ஏ: கோரிக்கை

(சென்னை)

மத்திய அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்டவேண்டும் என்று அறிக்கை வெளியிட்டமைக்காக தமிழக காங்கிரஸ் கமிட்டித்தலைவர் பதவியிலிருந்து வாழப்பாடியை நீக்கவேண்டும். இவ்வாறு விருதுநகர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் சஞ்சய் ராமசாமி கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் வாழப்பாடிஇராமமூர்த்தி ஒரு சர்வாதிகாரியைப்போல செயற்பட்டுவருகின்றார். மத்திய அமைச்சர் அஜித் பாஞ்சா மற்றும் தங்கபாலு போன்றோருக்கு கறுப்புக் கொடி காட்டுவோம் என்று சர்வாதிகாரிபோல அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் நரசிம்மராவின் ஒப்புதலோடு தமிழகம் வந்து விழாவில் கலந்து கொண்டு தனது கருத்தை தெரிவித்த அஜித் பாஞ்சாவை விமர்சனம் செய்துள்ளார்.

நூறு ஆண்டுகால காங்கிரஸ் பாரம்பரியத்தையே குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் வாழப்பாடி இறங்கிவிட்டார், இனியும் இவர் பதவியில் நீடித்தால் தமிழ் நாட்டில் காங்கிரஸின் வளர்ச்சி பாதிக்கப்படும். தனக்கு வேண்டுமானால் யாரையும் ஆதரிப்பதும், தனக்கு வேண்டாம் என்றால் யாரையும் எதிர்ப்பதும் வாழப்பாடிக்கு வாடிக்கையாகிவிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

## பாண்டிச்சேரி அரசு மீது அ இ அ.தி.மு.க. ஊழல்புகார்

(சென்னை)

பாண்டிச்சேரியூனியன்பிரதேசத்தில் முதலமைச்சர் வைத்திலிங்கம் தலைமையிலான அரசின் மீது பல்வேறு ஊழல்கள் குறித்து 34 குற்றச் சாட்டுக்கள் அடங்கிய மகஜர் ஒன்றை அ. இ அ. தி மு க வினர் ஆளுநர் டாக்டர் எம். சென்னாரெட்டியிடம் கையளித்துள்ளனர்.

இது பற்றி கருத்து தெரிவித்த ஆளுநர் சென்னாரெட்டி, 36 பக்கங்கள் கொண்ட இம் மகஜரின் நான்கு பிரதிகள் பாண்டிச்சேரி மாநில அ. இ. அ. தி மு. க வின் சட்டப் பேரவை உறுப்பினர்களால் என்னிடம் தரப்பட்டுள்ளது.

ஆளுநர் என்ற முறையில் இந்தக் குற்றச்சாட்டுகளைப் பரிசிலித்து ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பேன் எனவும் தெரிவித்தார்.

மேலும் கூறுகையில், தமிழக முதல்வருக்கும் எனக்குமிடையே எந்த கருத்து வேறுபாடும் இல்லை. இருந்தாலும் நான் பொறுமையாக இருந்து வருகிறேன். பிரச்சினைகள் வளர்ந்து வந்தால் தான் ஒரு முடிவுக்கு வரும். மாங்கனியை பழுத்த பின்னர் தான் பறிக்க வேண்டும். அது போல் எந்த நேரத்தில்எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அப்படி நடவடிக்கை எடுப்பேன். நான் அரசியலில் சிரோ (சைபர்) அல்ல. எனக்கும் அரசியல் தெரியும் முதல்வரின் பிறந்த தினத்திற்கு நான் வாழ்த்து அனுப்பிய போதும் அவர் எனது பிறந்த நாளுக்கு வாழ்த்துக் கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

## காங். பணிமனையில் அடிதடி வாகனம் சேதம்; பலர்காயம்

(சென்னை)

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமைஅலுவலகமான சென்னையிலுள்ள சத்தியமூர்த்தி பவனில் நேற்றுமுன்தினம் இரு கோஷ்டியினருக்கிடையே கைகலப்பு ஏற்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் இரு வெவ்வேறு குழுவினருக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு விவாதமாக மாறி கைகலப்பாகியதாகபொலிசாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கைகலப்பையடுத்து அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்கள் பெரும் சேதமடைந்ததோடு பலரும் காயமடைந்துள்ளனர், இந்தக் கைகலப்புத் தொடர்பாக பொலிசார் 19பேரைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான தண்டாயுதபாணி பிரதமரும் கட்சித் தலைவருமான பி. வி நரசிம்மராவ், உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான், நாடாளுமன்ற விவகாரத் துறைஅமைச்சர் வி. சி. சுக்லா உட்பட பலருக்கும் தகவல்கள் அனுப்பியுள்ளார்.

## கொடி, சின்னம் பிரச்சினையில் தீர்ப்பு வழங்கப்படுவதை நீதிமன்றம் ஒத்திவைப்பு

(சென்னை)

தி.மு.க வின் கொடி மற்றும் சின்னம் என்பவற்றை வை. கோபாலசாமியும் அவரது ஆதரவாளர்களும் பயன்படுத்துவதற்கு நிரந்தர தடைவிதிக்குமாறு கோரி தி மு. க வின் பொதுச் செயலர் க. அன்பழகன் தாக்கல் செய்த மனுவின் மீது தீர்ப்பு வழங்குவதை சென்னை நீதி மன்றம் ஒத்தி வைத்துள்ளது.

மைலாப்பூர், மற்றும் பெருந்துறை சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பமாகுவதற்கு முன்பு. இந்த மனு மீது தீர்ப்பு வழங்கப்படவேண்டும். வை. கோபாலசாமி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இருதரப்பினரதும் வாதங்களை கேட்ட நீதிபதி தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார் இம் மனுவின் மீதான இடைக்காலத் தீர்ப்பு ஒன்றில் வை. கோ அணியினர் சின்னம் மற்றும் கொடிகள் பயன்படுத்துவதற்கு நீதிமன்று தடைவிதித்திருந்தது தெரிந்ததே.

## ஹர்சத் மேத்தா மீண்டும் கைது

(டில்லி)

பங்குச்சந்தைத் தரகர் ஹர்சத் மேத்தாவும் மற்றும் ஒன்பது பேரும் விசேட விசாரணைப் பிரிவான சி. பி. ஐயினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுடில்லியிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபையில் சுமார் 631கோடி ரூபாவுக்கு ஊழல் மோசடி செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி நிக்ஸன் காலமானார்

## ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டனர்

(கிகாலி)

ஆபிரிக்க நாடான றுவாண்டாவில் அண்மையில் நடை

## மனித உரிமை மீறல்களில் இஸ்ரேலிய படை ஈடுபாடு

இதேசமயம், வெளிநாடு சென்ற சிறிசேன கூரேயை உடன் நாட்டுக்குத் திரும்புமாறு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா விடுத்த அழைப்பையும் அவர் பொருட்படுத்தவில்லை. 20ஆம் திகதிக்கு முன்னர் கூரே நாட்டில் இருக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாகவே அவர் செயற்பட்டார். டி. பி. விஜேதுங்காவின் இரண்டாவது தந்தி கிடைத்த பின்னர் அதாவது 20ஆம் திகதிக்குப் பின்னரே நாடு திரும்பினார்.

சிறிசேன கூரேயின் இந்நடவடிக்கையானது, காமினி திசாநாயக்காவைப் பாராளுமன்ற உறுப்பினராக்கும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் நடவடிக்கைக்குத் திட்டவட்டமான எதிர்ப்பைக் காட்டும் நடவடிக்கையாகும். ஆனால், இதுவரையில் கூரே மீது டி. பி. விஜேதுங்காவினால் வெளிப்படையான நடவடிக்கை எதையும் எடுக்கமுடியவில்லை. இதற்குக்காரணம் டி. பி. விஜேதுங்கா நினைத்த மாத்திரத்தில் கூரே மீதோ அன்றி எதிர்ப்பாளர்கள் மீதோ நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனெனில், டி. பி யை எதிர்க்கும் அணியினரில் முக்கியமானவர்கள் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அணியினராகும். அவர்கள் அரசியல் பலம் உள்ளவர்களாகவே தற்பொழுதும் காணப்படுகின்றனர்.

அத்தோடு, தென் மாகாணசபைத் தோல்விக்கு டி. பி. விஜேதுங்கா கடைப்பிடித்த கொள்கையே காரணம் என ஐ. தே. க விலுள்ள பிரேமதாசா அணியினர் குற்றம் சாட்டுகின்றனர், பிரேமதாசாவின் கொள்கையைப் புறக்கணித்தமையும், பிரேமதாசாவின் சாதனைகளை அரசு மறைக்க முற்பட்டமையுமே காரணம் என்பது அவர்களின் குற்றச்சாட்டாகும்.

இந்நிலையில், டி. பி, விஜேதுங்காவினால், அவர்களை மிரட்ட முடியுமே ஒழிய நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றே கருத இடமுண்டு. ஆனால், டி. பி. விஜேதுங்காவின் கடந்த கால செயற்பாடுகள், அறிவிப்புக்கள் என்பனவற்றை உற்று நோக்கினால் அவர் பல அரசியல், இராஜதந்திர தவறுகளை தெரிந்தோ தெரியாமலோ செய்யக் கூடியவர் என்ற முடிவிற்கே வரமுடிகின்றது.

இந்த வகையில், டி. பி. விஜேதுங்கா தனது எதிர்ப்பாளர்கள்மீது ஏதாவது சடுதியான நடவடிக்கை எடுத்தால் அது ஐ. தே. க வீற்கு மட்டுமல்ல டி. பி. விஜேதுங்காவிற்குமே கேடாக முடியும். ஒருவகையில் டி. பி. விஜேதுங்கா தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டதாகவும் முடியும். இதனால் ஐ. தே. க பல அணிகளாக உடைவதோடு, அடுத்த தேர்தலில் சந்தேகத்திற்கிடமின்றி தோல்வி அடைவதையும் தவிர்க்க முடியாது போகும்.

# நிக்ஸன் காலமானார்

(வாசிங்டன்)

இருதயத்தாக்கம் காரணமாக அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அமெரிக்க முன்னாள் அதிபர் றிச்சர்ட் நிக்ஸன் நேற்றுக் காலை மரணமானார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நியூயார்க் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர் டாக்டர்களின் தீவிர கண்காணிப்பில் இருந்தபோதும் நேற்றுக் காலையில் மரணமானார்.

இவர் அமெரிக்காவின் 37-வது அதிபராக இருந்தார்என்பதும், தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்பாகவே ஊழல்விவகாரம்தொடர்பான குற்றச்சாட்டில் பதவி விலகிய ஒரே ஜனாதிபதி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவரது பதவிக்காலத்தின் போதுதான் சோவியத்யூனியனுடன் இணக்கப்போக்கு கடைப்பிடிப்பது ஆரம்பமாகியது என்பதும் சீனாவுடனான அமெரிக்க உறவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். 71ஆம்ஆண்டில் பதவியேற்ற இவர் 74-ம் ஆண்டில் பதவி துறந்தார். இறக்கும்போது இவருக்கு 81வயது ஆகும்.

டாவில் அண்மையில் நடைபெற்று வரும் மோதல் சம்பவங்களில் சிக்கி இது வரையில் சுமார் ஒரு லட்சம் பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

றுவாண்டாவின் ஜனாதிபதி ஹப்யறிமானா படுகொலை செய்யப்பட்டதை தொடர்ந்து வன்முறை மோதல்கள் நடைபெறுகிறது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 04. 24 - ஞாயிறு இரவு

08.01 ற்கு- இசையரங்கம்- நிகழ்ச்சியில் பாடுபவர் திரு. செ. குமாரசாமி
08 .30 ற்கு - செய்திகள்
08.40 ற்கு- தொடர் நாடகம் ''இலங்கைமண் 23 ஆம் அங்கம்''

1994. 04. 25 - திங்கள் காலை

07.02 ற்கு- மாவீர வணக்கம்
07.15 ற்கு - மணியாரம்
07. 30 ற்கு - செய்திகள்
07.35 ற்கு - பத்திரிகைச் செய்திகள்
07.40 ற்கு - மணியாரத்தின் தொடர்ச்சி.

### மன்னிப்புச்சபை கண்டனம்

(லண்டன்)

பாலத்தீனியர்கள் மீதான இஸ்ரேலிய அரசின் நடவடிக்கைகளால் மனித உரிமை மீறப்படுகின்றது என்று சர்வதேச மன்னிப்பு அமைப்பு இஸ்ரேல் அரசின் மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜோர்தான் ஆற்றின் மேற்குக்கரை மற்றும் காஸாப் பகுதிகளில் வருடம்தோறும் ஆயிரக்கணக்கில் பாலத்தீனியர் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் சித்திரவதை செய்யப்படுவதாகவும் மன்னிப்பு சபை குற்றம் சாட்டியுள்ளது.

# வடகொரியா தாக்கினால் எதிர்ப்பது குறித்து ஆராய்வு

(சியோல்)

வடகொரியா திடீரெனதாக்குதல் ஒன்றை நடத்தினால் கூட்டு நிலையில் தயாராக இருப்பது குறித்து அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி தனது ஜெனரல்களுடனும், தென் கொரியத் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

வட கொரியா தனது அணுசக்தி நிலைகளை சோதனைக்குள்ளாக்க தொடர்ந்து மறுத்து வருவதால் கொரியத் தீபகற்பப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

வட கொரியாவில் 11 இலட்சம் துருப்புக்கள் இருக்கின்றன என்பதும் தென் கொரியாவில் 6, 50000 துருப்புக்களும் அவற்றுக்குத் துணையாக 37,000 அமெரிக்கத் துருப்புக்களும் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை வட கொரியத் தலைவர் கிம். இல் சுங் தனது 82 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நிருபர்களுடன் பேசுகையில் வட கொரியா அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கவோ அவற்றை உற்பத்திசெய்ய முயலவோ இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

# சமாதானப் பேச்சுக்கள் அடுத்த மாதத்தில் நடக்கும்

### கம்போடிய இளவரசர் நம்பிக்கை

கம்போடிய அரசும் கமரூச் போராளிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வரும் என்று கம்போடிய இளவரசர் நொரடாம் சிகானூக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்கான அழைப்பைதாம் விடுத்திருப்பதாகவும் அடுத்த மாதம் தமது அரண்மனையில் பேச்சுக்கள்நடக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டு யுத்தத்தால் நாட்டை நாசப்படுத்திவிட்டதாகவும், நாட்டு நிலைமைமிகமோசமாகியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கமரூச் இயக்கத்தின் தலைமையகத்தை கம்போடிய அரசப்படைகள் கைப்பற்றியிருந்ததும் கடந்த வாரத்தில் நடத்தப்பட்ட பெரும் எடுப்பிலான தாக்குதல்மூலம் கமரூச் படைகள் அதனை மீளப்பெற்றதும் தெரிந்ததே.

# இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெற வேண்டும்

### ஹமாஸ் இயக்கம் நிபந்தனை

(அம்மான்)

1967 இல் மத்திய கிழக்குப் போரில் இஸ்ரேல் கைப்பற்றிய எல்லைகளிலிருந்துவாபஸ்பெற்றால் சமரசத்திற்கு இணங்குவதாக தீவிரவாத இஸ்லாமிய ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

மேற்குக்கரை, காஸா, ஜெருசலம் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியப்படைகள் வாபஸ் பெற வேண்டும். யூதக்குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என ஹமாஸ் இயக்கம் கூறியது.

ஹமாஸ் இயக்கம் தனது எதிரியான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் வெகுவாக கண்டித்துள்ளது. பி.எல். ஓ இஸ்ரேலுடன் நடத்து பேச்சுகள் அர்த்தமற்றவை என அது தெரிவித்தது.

**இயற்கை எம் உடமை - அதைக் காப்பது நம் கடமை**

யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

SYLVESTER-STALLONE

நடித்த

RAMBO

தினசரி மாலை 4.00, 6.00
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4.00, 6-00 மணி

பெப்ரவரி 94 ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பி பகல் 2-30 மணிக்கு காண்பிக்கப்படும்

(சி-9250)

## ஹேமா - தொண்டா சந்திப்பு

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் திருமதி ஹேமா பிரேமதாசாவை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார். இச்சந்திப்புக் குறித்து பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் தொண்டமான் அரசியல் விடயமாக எதுவும் பேசவில்லை என்றார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாண பிரிவின் விசேட பொதுக்கூட்டம் இன்று மு. ப. 11.00 மணிக்கு 154, பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள பிரிவுக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ் விசேட பொதுக்கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுகக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# வடக்கு-கிழக்குக்கான ஒதுக்கீடு சிங்களப் பிரதேசத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் வேலைத்திட்டத்திற்கென ஒதுக்கிடு செய்யப்பட்ட பெருந்தொகை பணத்தை 'சேவா லங்கா' என்ற நிறுவனம் சிங்கள பிரதேசங்களுக்கு பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் சர்வோதய நிறுவனத்திலிருந்து பிரிந்து சென்ற இந்த நிறுவனம் அரசாங்கத்தின் உதவியுடன் செயல்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் புதிய வேலைத்திட்டத்திற்கென சிறிலங்கா அரசாங்கம் எழுபது இலட்சம் ரூபா பணத்தை 'சேவா லங்கா' நிறுவனத்திற்கு வழங்கியது என்றும் இப்பணம் வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள சிங்கள மக்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வோதயத் தலைவர் ஆரியரட்ணாவின்மருமகனால் அமைக்கப்பட்ட 'சேவா லங்கா' என்ற புதிய நிறுவனத்திற்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆசி தொடர்ந்து இருந்து வருவதாகவும் ஆரியரட்ணாவிற்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள செல்வாக்கை உடைப்பதற்கு அரசாங்கம் இப்புதிய நிறுவனம் அமைக்க உதவியது என்றும் தெரிவிக்கப்பட்டது

இதனடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள மக்களுக்கு உதவும் முகமாக சிறிலங்கா அரசாங்கத்தினால் சுமார் எழுபது இலட்சம் ரூபா 93 - 94 ஆண்டுகளின் வேலைத்திட்டத்திற்கென வழங்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

'சேவா லங்கா' நிறுவனத்தின் சகல அலுவலகங்களும் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே உள்ளன இதன் வேலைத்திட்டங்கள் யாவும் அப் பிரதேசங்களிலேயே செயல்படுத்தப்பட்டு வருகின்றன

இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள சில தமிழ்க்குடும்பங்கள் இந்த புதிய வேலைத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டபணத்தில் சிறிய நன்மை பெறுவதை வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல மக்களும் இந்த வேலைத்திட்டத்தில் நன்மை பெறுவதாக பிரசாரம் செய்யப்படுகிறது.

கரசா குமார நவரட்ண என்றஆரியரட்ணாவின் மருமகனை தலைவராகக்கொண்ட இந்த நிறுவனத்தின் தலைமையகம் நுகேகொடயில் உள்ளது. (தி)

## மருந்து கலவையாளருக்கு யாழ் இல் பரீட்சை

சுகாதாரத் திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்டு வரும் அரசாங்க மருந்துக் கலவையாளர்களுக்கான வினைத்திறமை காண் தடை பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்துவதற்கு கொழும்பிலுள்ள சுகாதார அமைச்சிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வதாக தற்போது யாழ்ப்பாணத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ். சண்முகதாஸ் உறுதியளித்தார்

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் பிரதேச கிளையின் சார்பில் அதன் தலைவர் திரு. சி திருநாவுக்கரசு, செயலாளர் திரு என். எம். கந்தசாமி ஆகியோர்பணிப்பாளரையும்சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளரின் அலுவலகத்தில் அண்மையில் நேரில் சந்தித்து வினைத் திறமை காண் தடைப் பரீட்சைகளை கொழும்பிலும் மற்றும், கண்டி, குருநாகல் போன்ற இடங்களிலும் நடாத்துவதைப் போல யாழ் மாவட்டத்திலும் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கொழும்பில் நடாத்துவதால் போக்குவரத்துக்கஷ்டம், தபால் தாமதம் போன்ற பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் கோரிக்கை விடுத்தனர். மருந்துக்கலவையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் பணிப்பாளரிடம் சங்க பிரதிநிதிகள் கையளித்தனர். குடும்ப நல சேவையாளர்கள் சங்கம், பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஆகிய தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் பணிப்பாளரைச்சந்தித்து தங்கள் கோரிக்கைகளை சமர்ப்பித்தனர்.

# கிரிக்கட் உதவி தலைவரின் வீட்டிற்கு கல்லெறி

## தொலைபேசியில் கொலை மிரட்டல்

சிறிலங்கா கிரிக்கட் அணியின் புதிய உதவி அணித்தலைவரான அசங்க குருசிங்கவின் நுகேகொட வீட்டிற்கு கும்பல் ஒன்று கல்லெறி நடத்தியதையடுத்தும் தொலைபேசி மூலம் கொலை மிரட்டல்கள் இவரின் மனைவிக்கு வந்ததையடுத்தும் இவரின் வீட்டிற்கு 24 மணி நேர பொலிஸ்காவல் போடப்பட்டுள்ளது

சார்ஜாவில் நியூசிலாந்திற்கு எதிரான சிறிலங்கா அணி தனது முதற் போட்டியில் தோல்வி கண்டதையடுத்து அன்றைய இரவு இவரின் வீட்டின் மீது கும்பல் ஒன்று கல்லெறி நடத்தியது. இதன் போது அசங்காவின் மனைவியும் பிள்ளைகளும் உணவருந்திக் கொண்டிருந்ததாகவும் கல்லெறியினால் அசங்காவின் மனைவி காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே இவருக்கு தொலைபேசி மூலமும் கடிதங்கள் மூலமும் கொலை மிரட்டல்களும் வந்திருந்தன.

இச்சம்பவங்களையடுத்து அசங்க குருசிங்கவின்வீட்டிற்கு 24 மணி நேரபொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது.

### இந்திய மீனவரின் நெருக்கடி

## இந்திய-சிறிலங்கா கூட்டுக்குழு ஆராய்வு

பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்கள் சந்திக்கும் நெருக்கடிகள் குறித்து சிறிலங்கா - இந்தியா கூட்டுப் பொருளாதார குழுக் கூட்டத்தில் இந்திய தரப்பினால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து இப்பிரச்சினை குறித்து பின்னர் கூடி ஆராய்வது என சிறிலங்கா தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

# கொழும்புகுண்டுவெடிப்பை புலிகள் செய்யவில்லை!

## பி. பி. ஸி. கொழும்பு செய்தியாளர்

(கொழும்பு)

அண்மையில் கொழும்பில் உல்லாசப் பயணிகள் விடுதிகளில் இடம் பெற்ற குண்டு வெடிப்புக்கள் விடுதலைப் புலிகள் மேற் கொள்ள வில்லை எனினும் இதுயார் வேலை என்பது மர்மமாகவே உள்ளது என பி. பி. ஸி சிங்கள சேவையான சந்தேசியவின் கொழும்புச் செய்தியாளர் எல் மோ பர்னாண்டோ தெரிவித்தார்.

இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதனை விடுதலைப் புலிகள் செய்ததாகத் தெரிவித்து அரசாங்கம் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயல்கிறது ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள உட்பூசல் காரணமாகவே குண்டு வெடிப்பு இடம் பெற்றுள்ளதாகவும் தலைமைத்துவத்தை தம் வசப்படுத்திக் கொள்ள முயலும் ஐக்கிய தேசியக் கட்சியினர் சிலர் செய்த சதி வேலையே இது எனவும் நுவரெலியா மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எச். பி. திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஜே ஆர் அரசாங்கத்தை மிரட்டுவதற்காக ஜே. வி. பியுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார் என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

மதுராவின் மதுரகான இன்னிசை நிகழ்வை பல் வகையிலும் சிறப்புப்படுத்திய

- மதுராவின் வாடிக்கையாளர்களுக்கும்
- தமிழீழ காவல்துறையினருக்கும்
- நிகழ்ச்சியை பல் வகையிலும் சிறப்புப்படுத்திய கலைஞர்களுக்கும்
- இளங் கலைஞர் மண்டபத்தில் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு இடம் தந்த நிர்வாகத்தினருக்கும் ஒளி, ஒலி வசதிகளை வழங்கிய மனோ லைற், கண்ணா சவுண்ஸ்

ஆகியோருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மதுரா ஆதரவாளர்களின்

பரிசுத்திட்ட சிட்டையின் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு; 2889 தங்கப்பதக்கம்
2ஆம் பரிசு: 3873 5000/-
3ஆம் பரிசு: 105 250/-

ஆறுதல் பரிசுகள் - 10

(1) 11674 (2) 1883 (3) 8131 (4) 2356
(5) 667 (6) 11912 (7) 5480 (8) 7673
(9) 5664 (10) 6575.

குறிப்பு: பரிசுத்திட்ட குலுக்கலில் தெரிவான அதிர்ஷ்டசாலிகள் மதுரா பட்டு மகாலில் சிட்டைகளைக் காட்டி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மதுரா பட்டு மகால்

75, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(சி-9257)

சைவ

நடைபெறவுள்ளன.

இத்தேர்வுக்கான அனுமதி அட்டை, நேரசூசி முதலானவை பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைத்துள்ளதாக பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு வ. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்

எத்தல் (கட்டுமரம்) போட்டி 26ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8, 30 மணிக்கு சுழிபுரம் திருவடி நிலையிலும் நடைபெறும். பிற உற்பத்திசார் போட்டிகளில் துலாப்பட்டைமூலம் நீர்இறைத்தல், தோட்டம் கொத்துதல், பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், இடுகு

ஜனாதிபதி

னையின் சிக்கல்களில் இந்தியா அகப்பட விரும்பவில்லை என்றும், மரத்துப் போய்விட்டதான உணர்வுகளுடன் இந்தியா நகர்ந்து செல்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடற்படை

கடலில் கைவிட்ட நிலையில் நீந்திக் கரை சேர்ந்தனர். தொடர்ச்சியாக இருபத்தைந்து நிமிடம் கடும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்ட கடற்படையினர் அப்பகுதியை விட்டு மறைந்த பின்னர் தமது உபகரணங்

மிதிவெடி

மிதிவெடிமேல் விழுந்ததையடுத்து அங்குள்ள மிதிவெடி வெடித்தது.

இம் மிதிவெடி வெடித்ததையடுத்துகல் வெடித்து சிதறிய போதுஇப் பெண் சிறுகாயமடைந்துபருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார்.

பீச்றோட்டைச்சேர்ந்தஇராசேந்திரன் - கங்காதரி (வயது 38) என்ற பெண்ணே நேற்று முன்தினம் இவ்வாறுகாயமடைந்தவராவார். (யோ)

காமினிக்கு

ளன.

தேசிய பட்டியல் உறுப்பினர்கள் எவரும் தமது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்ய மறுத்ததைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## செப்ரீமியாவிற்கு 2குழந்தைகள் பலி

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியாவிற்கு இரண்டு குழந்தைகள் கடந்த 72 மணித்தியாலத்தில் மரணமடைந்துள்ளார்கள்.

கிளிநொச்சிபரந்தனைச்சே

நன்றி கூறுகின்றோம்

குமாரவேலு சுந்தரலிங்கம் ஆகிய எனது கைச்

குமாரவேலு சுந்தரலிங்கம் ஆகிய எனது கைச் சங்கிலியை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு. S. E. பெனான்டோ அவர்கள் பழைய பூங்கா வீதியில் 23 - 4 - 94-ல் கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்துள்ளார். எதுவித சன்மானமும் பெறாது எனது கைச் சங்கிலியை ஒப்படைத்த அவரது குடும்பத்தினருக்கு எனது குடும்பத்தினர் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றனர்.

கு. சுந்தரலிங்கம்
குடும்பத்தினர்.

(சி-9258)

தல், பனை மரம் ஏறுதல், குட்டான் இழைத்தல், கிடுகு பின்னுதல், உணவுப் பண்டம் தயரித்தல் தும்புத் தடிதயாரித்தல், விளக்குமாறு தயாரித்தல் என்பன 27ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஊரெழு அம்மன் கோவில் முன்றலிலும் நடைபெறும்.

அப்பகுதியை விட்டு மறைந்த பின்னர் தமது உபகரணங்களை மீட்டனர்,

அதேசமயம் இப்பகுதிகள் நோக்கி பலாலி இராணுவ முகாமில் இருந்தும் படையினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் நேற்று முன்தினம் இரவு 8 00 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (யோ)

## முஸ்லிம்

சந்தேக நபர் முஸ்லிம் ஜிகாத்இயக்கத்தைச் சேர்ந்தவர் என விசாரணையிலிருந்து தெரிய வந்ததாக பொலிஸ் தலைமையகத்தினால்அறிவிக்கப்பட்டுள்ளது.

கிறது.

இதனைத் தொடர்ந்து கட்சி ஒரு பெரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக ஐ. தே. க. வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ர்ந்த ஜீவரட்ணம் ஜீவசுரேஸ் என்ற ஒருவயதும் 6 மாதமும் நிரம்பிய குழந்தையும், நேற்று முன்தினம் ஒருகுழந்தையுமாக இரு குழந்தைகள் மரணமடைந்துள்ளன, (சி)


மிக விரைவில்...

உங்கள் கண்ணெதிரில்..

போராளிகளும் மக்களும் இணைந்து வழங்கும்

நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு

# காற்றுவெளி

தரமான கலைப் படைப்பின்

திறமான கருத்தோவியம்

- மக்களோடு புலிகள்
- சண்டைக் காட்சிகள்
- நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்

உங்கள் இதயங்களில் இடம் பிடிக்கும் இன்னும் பல அரிய கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள்

மறவாதீர்கள் காற்றுவெளி

தவறாதீர்கள் பார்த்து மகிழ

இது ஒரு நிதர்சனம் தயாரிப்பு

(சி-9234)



மங்களகரமான திறப்புவிழா

# சோழன் அரிசி ஆலை

இன்று 24-4-94 பத்து மணிக்கு திறந்து வைக்கப்படும் மீசாலையில் அமைந்துள்ள சோழன் அரிசி ஆலையில்

நாட்டரிசி

தீட்டல் பச்சை

உடையல் பச்சை

மற்றும் தவிடு என்பனவற்றை நியாய விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## சோழன் அரிசி ஆலை

- மீசாலை

(சி-9256)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகேஸ்வரி அம்பலவாணர்

களபூமி காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும், இல' 44-4 நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 23-04-1994 சனிக்கிழமை காலமானார். இவர் ஆறுமுகம் அம்பலவாணர் (கணக்காளர் த. பொ. மே. நிறுவனம்) அவர்களின் அன்பு மனைவியும், யாழ்ப்பாணம் பிரபல வர்த்தகர் S. V முருகேசுவினதும், காலம் சென்ற இராசம்மாவினதும் அன்பு மகளும், காலம் சென்ற சட்டத்தரணி திரு. திருமதி. க ஆறுமுகம் அவர்களின் மருமகளும், தங்கராசா (லண்டன்), இராஜேஸ்வரி, நடராசா, தங்கரத்தினம், பூமணி, குணரத்தினம், சதானந்தன் (லண்டன்), சிவானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அன்னம்மா (மலேசியா), மனோன்மணி சறோஜினிதேவி நாகேஸ்வரன் (இலங்கை வங்கி யாழ்), உமாதேவன், சறோஜினிதேவி (லண்டன்), பத்மராணி, இராசமலர், பத்மினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24 - 04 - 1994) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ஆ. அம்பலவாணர்
(கணவர்)
S. V. முருகேசு
(தகப்பன்)

44-4, நல்லூர் செட்டித்தெரு
ஒழுங்கை,
நல்லூர்.

(சி-9260)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் லக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் ட்டது.